முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

— வார இதழ் —

முரசு 5 | 26-9-58 | வெள்ளி | ஒலி 21

உடல், பொருள், ஆவி - தந்தனர்!

அடிமைப்பட்டுக் கிடக்கும் ஒவ்வொரு நாட்டிலும் விடுதலை வெறி உச்ச கட்டத்தை அடைந்திருக்கிறது!

உலகப் படத்திலே சுதந்திரமடைந்த நாடுகளின் தொகை—ஆதிபத்திய வெறியிலிருந்து விடுபட்ட நாடுகளின் எண்ணிக்கை—வேறெந்த நூற்றுண்டையும் விட இந்த நூற்றுண்டில் அதிகமடைந்திருக்கிறது.

அந்தப் பட்டியலிலே இடம் பெறுகின்ற ஒன்றுதான் சைப்ரஸ் தீவு!

அந்தத் தீவின் விடுதலைக் கிளர்ச்சிக்கு மகாரியஸ் பாதிரியார் தலைமை வகித்ததும்—ஜெபமாலை உருட்டியபடி பரலோகத்திலிருக்கும் பரம பிதாவின் அருள் வேண்டி ஜெபித்துக் கொண்டிருந்த அவரது வாய் "கிரேக்கத்தோடு சைப்ரஸ் இணைக்கப்படத்தான் வேண்டும்!" என்று அரசியல் கோஷம் எழுப்பியதையும் — அதனல் அவர் நாடு கடத்தப்பட்டதையும் நாமறிவோம்.

அது போலவே அங்கே சைப்ரஸ் துருக்கியோடுதான் இணைய வேண்டும் என்று ஒரு சாரார் முழக்கமிட்டனர்.

இந்த உபகண்டத்திலே பிரித்தாளும் கொள்கையைக் கடைப்பிடித்து வெற்றி கண்ட ஆங்கில ஏகாதிபத்தியம் அங்கே இரு சாராரையும் தந்திரமாக மோத விட்டது! அதன் விளைவாக அந்தச் சின்னஞ்சிறு தீவிலே தாய் நாட்டுப் பற்று கொண்டோரின் இரத்தம் உடைப்பெடுத்து ஓட ஆரம்பித்தது.

சமீபத்தில் 'நிக்கோசியா' நகரத்தின் அருகில் ஏற்பட்ட கலவரத்தின்போது மூன்று வீரர்கள் மடிந்தனர்!

அந்த நேரம் அருமைப் புதல்வர்களை இழந்த தாய்மார்களும்—ஆசைச் சகோதரர்களை இழந்த சகோதரிகளும் அழுது புலம்புவதைத்தான் இந்தப் படங்கள் விளக்குகின்றன.

பீறிட்டு எழுகின்ற தாய்மைப் பாசத்தைத் தடுக்க முடியாது அடக்குவோரையும் மீறி அலறுகிறுள் ஓர் அன்னை!

தாயகப் பற்ருல் சவப் பெட்டிக்குள் முடங்கிவிட்ட தனயனின் உடலை அணைத்து அகல மறுக்கிருள் ஒரு தாய்!

இறுதி யாத்திரை புறப்பட்டுவிட்ட அந்த எதற்கு மஞ்சா இதயங் கொண்ட காளையரைப் பெற்ற தாய்க்குலம் கண்ணீர் விட்டுக் கதறுகிறது!

அவர்கள் கொட்டுகின்ற கண்ணீர் வெள்ளத்திலே—இந்த கோலத்திற்குக் காரணமான ஆதிபத்திய வெறி கரைந்து மறைந்து அழிந்து விடப் போவதை உலகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது!

7 முதல் வரலாற்று ஆசிரியன்

அன்புள்ள மாதவி,

வரலாறு எழுதுவது மிகவும் சிரமமான காரியம். வரலாற்று உண்மைகளைத் துருவி ஆராய்ந்து, உள்ளதை உள்ளபடியே ஒழுங்குபடச் சொல்வதென்பது மிகவும் சிரமமான காரியம். ஏட்டிலே எழுதப்பட்டும், கல் வெட்டாகப் பொறிக்கப்பட்டும், பூமியிலிருந்து புதைபொருளாக வெட்டி எடுக்கப்பட்டும் ஏராளமான சான்றுகள் வரலாற்று ஆசிரியருக்குத் துணை நிற்கும் காலமிது. உலகத்தின் எந்த மூலைக்கும் வேண்டியபொழுது சென்று ஆராய்ச்சிகள் செய்யவும் ஆதாரங்கள் சேகரிக்கவும் விஞ்ஞான வசதிகளும், வாய்ப்புகளும், போக்குவரத்து சாதனங்களும் நிரம்பியுள்ள காலமிது. இந்தக் காலத்திலேயே வரலாறு எழுதுவது சிக்கலும் சிரமமும் நிரம்பிய வேலையாக இருக்குமானால், எந்தவிதமான நவீன வசதிகளுமின்றி, பல்லாயிரக் கணக்கான மைல்கள் பாதையில்லாத பிரதேசங்களில் பயணம் செய்து, கொடு விலங்குகளின் கொடுமை—கள்ளர்களின் வழிப்பறிக் கொள்ளை ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் சென்று, மக்களோடு பழகி, செய்திகளையறிந்து, கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பே ஒருவர் வரலாறு எழுதும் பணியில் ஈடுபட்டார் என்றால் அவர் எப்படிப்பட்ட மகத்தான சாதனையைச் செய்திருக்க வேண்டுமென்று எண்ணிப் பார்!

கி. மு. ஐந்தாம் நூற்றாண்டு, கிரேக்கம்—அதிலும் குறிப்பாக ஏதென்ஸ் நகரம் — கலையிலும் இலக்கியத்திலும் உச்ச நிலையில் நின்று ஒளி விட்டுக் கொண்டிருந்த காலம். அவற்றைப் பற்றியெல்லாம் என்னுடைய பின் வரும் கடிதங்களில் விரிவாகக் குறிப்பிடுவேன். கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் ஆசியா மைனரில் பிறந்து, ஆசியா, ஆஃப்ரிகா, ஐரோப்பா ஆகிய நாடுகளெல்லாம் சுற்றி, தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் வருங்காலச் சந்ததிகளுக்குப் பயன்பட வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் தொகுத்து முறைப்படுத்தி எழுதிய முதல் வரலாற்று ஆசிரியனைப் பற்றி இந்தக் கடிதத்தில் உனக்கு எழுதப்போகிறேன்.

ஹோமர் உலகம் கண்ட முதல் பெரும் கவிஞன்; டெமாஸ்தனிஸ் உலகம் கண்ட முதல் பெரும் பேச்சாளன்; ஆர்க்கிமிடிஸ் உலகம் கண்ட முதல் பெரும் விஞ்ஞானி; அதேபோல் உலகம் கண்ட முதல் பெரும் வரலாற்றுப் பேராசிரியன் ஹெரோடோடஸ் (Herodotus) அவரே சரித்திரத்தின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.

ஹெரோடோடஸ் ஆசியா மைனரிலுள்ள ஹலிகார்னசஸ் என்னும் ஊரில் கி. மு. 484-ல் பிறந்தார். இந்த ஆண்டுகூட அவர் பிறந்த சரியான ஆண்டுதானா என்பது சந்தேகமே. ஒருவேளை சற்று முன் பின்னாக இருக்கலாம். காலத்தை வரையறுத்து சரித்திரம் எழுதும் பழக்கத்தை உலகிற்குக் கற்றுக் கொடுத்தவர் தன்னுடைய பிறப்பு வளர்ப்பு பற்றி ஏதும் குறிப்பிடாமல் போனது புதிராகவே இருக்கிறது.

"ஹெரோடோடஸாகிய நான் இந்த நூலை எழுதுவதன் நோக்கம், உலகில் இபபொழுது நடக்கும் நிகழ்ச்சிகளும், மக்களின் பழக்க வழக்கங்கள் பற்றிய உண்மைகளும், வாழும் பிராணிகள்—பறவைகள் பற்றிய செய்திகளும் எதிர்கால மக்களுக்குத் தெரியாமலேயே போய்விடக் கூடாது என்பதற்காகவே...," என்று, தான் ஒன்பது பகுதிகளாக எழுதியுள்ள சரித்திர நூலின் முதல் பகுதியை ஆரம்பிக்கும்பொழுது ஹெரோடோடஸ் குறிப்பிடுகிறார். அவர் எழுதியுள்ள ஒன்பது பகுதிகளும் ஒப்புயர்வற்ற கருவூலங்களாகும். அவைகளில் அவர் குறிப்பிட்டுள்ள விஷயங்களே அக்கால மக்களைப் பற்றியும் அவர் தம் பழக்க வழக்கங்கள் பற்றியும் நாம் அறியப் பெரிதும் துணைபுரிகின்றன. ஆகவேதான் கிரேக்க ஞானி சிசரோ அவரை 'வரலாற்றுத் தந்தை' என்றழைத்துப் பெருமைப்படுத்தினார். வெறும் வரலாறு மட்டும் ஹெரோடோடஸ் எழுதினாரில்லை; அதை ஒப்பற்ற இலக்கியமாகவே சுவைபட எழுதினார். வளமிக்க, கருத்துச்செறிவுள்ள உரை நடைக்கு இன்றும் ஓர் எடுத்துக் காட்டாகவே அது விளங்குகிறது. நிகழ்ச்சிகளையும் கர்ண பரம்பரைக் கதைகளையும் தொகுத்துச் சொல்லும் நூலாக அது இருந்தாலும், அந்த ஒன்பது பகுதிகளில் ஒரு இடத்திலாவது படிப்போருக்கு சுவைக் குறைவு ஏற்படாதவாறு அவ்வளவு அழகாக எழுதியிருக்கிறார்.

ஹலிகார்னசஸ் நகரத்தை ஆண்ட லிக்டாமிஸ் என்ற கொடுங்கோலனை எதிர்த்து நடந்த புரட்சியில் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டதின் விளைவாக ஹெரோடோடஸ் நாடு கடத்தப்பட்டார். நாடு கடத்தப்பட்ட அவர் நாடோடியானார். தேசம் தேசமாகச் சுற்றினார். வெவ்வேறு மக்களின் பழக்க வழக்கங்களை அவர்களோடு வாழ்ந்து தெரிந்து கொண்டார். அக்காலத்தில் நாகரிகத்தின் கேந்திர ஸ்தானமாக விளங்கிய ஏதென்ஸ் நகரில் பல காலம் தங்கியிருந்தார். அங்கு வாழ்ந்த சோஃபகிலிஸ் என்ற நாடக ஆசிரியரோடு மிகவும் நெருங்கிப் பழகினார். சோஃபகிலிஸ் இவர்மீது பாடலொன்றே புனைந்து வெளியிட்டார். தாம் எழுதிய வரலாற்றுக் குறிப்புகளை எல்லாம் ஏதென்ஸ் நகர மக்களுக்கு இவர் அடிக்கடி படித்துக் காட்டுவது வழக்கமென்றும், அதைக் கேட்டு மகிழ்ந்த மக்கள் பொதுப் பணத்தில் ஒரு பகுதியை இவருக்கு வெகுமதியாக அளித்தனரென்றும் ஒரு செய்தியுண்டு.

தமது வரலாற்று நூலில் ஹெரோடோடஸ் குறிப்பிடும் பெரும் பகுதி, அவர் தாமே நேரில் சென்று கண்டறிந்த உண்மைகளாகும். வசதிக்குறைவான அக்காலத்தில் எவ்வளவு தொல்லைகளுக்குப் பின் அவர் அவ்வுண்மைகளைச் சேகரித்திருக்க வேண்டுமென்பதை எண்ணும்போது, இப்படிப்பட்ட பெரு மக்களின் உழைப்புத்தான் மனித அறிவை வளர்த்திருக்கிறது என்பதை உணரும்போது, நமது நெஞ்சம் நெக்குருகிறது; நம்மையறியாமலேயே நன்றியுணர்ச்சி பொங்குகிறது!

ஹெரோடோடஸ் எகிப்துக்குச் சென்றார்; பாபிலோனியாவைப் பார்த்தார்; பாரசிகமெங்கும் சுற்றினார்; டான்யூப் நதிக் கரையில் உலாவினார்; கிரீமியா தீபகற்பத்தில் வாழ்ந்தார்; இப்பொழுது ஜார்ஜியா என்றழைக்கப்படும் பிரதேசத்தில் (ரஷ்யாவில் இருக்கிறது; இதுதான் ஸ்டாலின் பிறந்த மாகாணம்) தங்கியிருந்தார்; சிரியாவின் கடலோரங்களில் அலைந்து திரிந்தார்; லிபியப் பாலைவனத்திலும் அவரது காலடிச் சுவடுகள் படிந்தன; கிரேக்கத்தின் மூலைமுடுக்கெல்லாம் சுற்றித் திரிந்தார். அவர் கண்டதும் கேட்டதும் அவரது கைவண்ணத்தால் வரலாற்று ஏடுகளாயின. உண்மையான விஷயங்களே தனது ஏட்டில் இடம் பெற வேண்டுமென்று விரும்பினார். தனது நூலில் குறிப்பிட விரும்பிய ஒரு செய்தி உண்மையா என்பதைச் 'சரிபார்க்க டயர் என்ற தனது நெடுந்தூர ஊருக்குக் கடல் வழியே பிரயாணம் சென்று கண்டதாக தமது நூலின் இரண்டாவது பகுதியில் குறிப்பிடுகிறார். இப்படி அல்லும் பகலும் அலைந்து ஆதாரங்கள் சேகரித்த ஹெரோடோடஸ் கி. மு. 420 லிருந்து 415 வரை ஏதென்ஸ் நகரில் வாழ்ந்து இறந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது.

ஹெரோடோடஸின் வரலாறு அப்பழுக்கற்றது என்று யாரும் கூறிவிட முடியாது. கண்ட உண்மைகளோடு கேட்ட செய்திகளையும் ஹெரோடோடஸ் தனது நூலில் எழுதியுள்ளார். அவற்றில் சில தவறுகளும் முரண்பாடனவைகளாகவும் இருக்கக்கூடும். வரலாற்று நிகழ்ச்சிகளைக் கடவுள் கண்காணித்துக் கட்டுப் படுத்துகிறார் என்று ஹெரோடோடஸ் நம்பினார். இரு கண்டங்களுக்கு ஒரே ஒரு வேந்தன் இருப்பதை அனுமதிக்க இஷ்டமில்லாமல்தான் கிரேக்க—பாரசிகப் போரில் பாரசிக மன்னனைக் கடவுள் தோற்கச் செய்தார் என்பது ஹெரோடோடஸின் எண்ணம். கர்வம் மிக்கவர்களுக்கு கடவுளின் தண்டனை கட்டாயம் உண்டு என்பது அவர் நம்பிக்கை. வரலாற்று ஆசிரியன் என்பதோடு மட்டுமின்றி பிராணிகளின் பழக்க வழக்கங்களை அறிந்து சொன்னதில் விஞ்ஞான அறிவு வளர்ச்சிக்கும் ஹெரோடோடஸ் தன்னாலான சேவையைச் செய்திருக்கிறார்.

தன்னுடைய கருத்துக்களின் நிழல் படியாமல் வரலாற்று ஆசிரியன் வரலாறு எழுதுவது கடினம். இக்காலத்து ஆசிரியர்களே அதைச் செய்ய முடியவில்லை என்கிறபோது, 2500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஹெரோடோடஸிடம் அதை எதிர்பார்த்துக் குறை கூறுவதில் பயனில்லை. குற்றங்களை எல்லாம் விடுத்து அவர் செய்த நல்ல தொண்டின் பெருமையினை உணர வேண்டும். வரலாற்றுக்கு முதல் நூலாகவும், உரை நடைக்கோர் எடுத்துக் காட்டாகவும் விளங்கும் அவருடைய நூல் ஒரு அறிவுக் கருவூலம். காலத்தால் பார்க்கும்போது அந்த வரலாற்று நூலின் பெருமை மிக உயர்ந்து காணப்படுகிறது. அந்நூலை உருவாக்க அவர் மேற்கொண்ட உழைப்பு நமக்கெல்லாம் வழிகாட்டி! ஓய்விருக்கும்போது அவரது நூலைப் படி. அதற்கான பொறுமை உனக்கிருந்தால் அதுவே எனக்கு நிரம்ப மகிழ்ச்சியளிக்கும்.

உன் அன்புள்ள,

அகத்தியன்

யானை சிங்கம் சுருட்டுகள்
TRADE MARK

T.V. முத்துகிருஷ்ணன்
திருச்சி-2

வெள்ளி 26—9—58 சென்னை

ஆட்சிமுறை, பாரீர்!

வழக்கம்போல் சென்னை அரசாங்கத்தின் தணிக்கையாளர் அறிக்கையில் இந்த ஆண்டும் ஊழல்களும், உதாசீனச் செலவுகளும் மலிந்திருக்கின்றன.

சிறிது கவனத்தோடும், பொறுப்புணர்ச்சியோடும் பொதுப் பணம் கையாளப்படாவிட்டால் அது எப்படி எல்லாம் விரயமாகிறது என்பதற்கு பல உதாரணங்கள் மலிந்து கிடக்கின்றன.

இதுபோன்ற தெண்டச் செலவுகள் பல்லாண்டுகளுக்கு ஒருமுறை தோன்றும் வால் நட்சத்திரங்கள் போன்ற நிகழ்ச்சியாக இந்த அரசாங்கத்தில் இருக்கவில்லை. அன்றாடம் தோன்றி மறையும் ஆதவனைப்போல் ஒவ்வொரு ஆண்டு தணிக்கையாளர் அறிக்கையிலும், எல்லோர் கண்களையும் கவரும் விதத்திலே இந்த ஊழல்கள் இருந்து கொண்டுதான் இருக்கின்றன.

ஆண்டுக்கு ஆண்டு இந்த எண்ணிக்கையில் கணிசமான அளவு குறைவு இருப்பதாகவே தெரியவில்லை.

உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட இடத்தில் மண் அணை கட்டுவதற்கு திட்டமிட்டிருந்தார்களாம். அரசாங்கம் திட்டமிட்டிருந்தால் அது எந்த அடிப்படையைப் பின்னணியாகக் கொண்டிருக்கும் என்று நினைக்கிறீர்கள்?

முதலில், அந்த இடத்தில் அப்படி ஒரு அணை அவசியம்தானா அது பொருளாதாரத் துறையில் லாபகரமானதுதானா—என்று தக்க நிபுணர்களைக் கொண்டு ஆராய்ந்து முடிவு கட்டுவார்கள். அந்த முடிவு சரி — என்று தெரிந்த பிறகுதான் வேலையைத் துவங்குவார்கள்.

—இதுதான் எந்தத் திறமையான அரசாங்கத்தின் கீழும் நடக்கக் கூடிய செயல் முறையாகும்.

ஆனால், குறிப்பிட்ட இந்த மண் அணையைப் பொறுத்தவரையில் என்ன நடந்தது தெரியுமா? அணை அவசியம்தான் என்று முடிவு செய்து வேலைகளைத் துவங்கி, ஆரம்பச் செலவுகளுக்காக, **1,12,929** ரூபாய்களைச் செலவழித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகுதான் அந்தக் கைதேர்ந்த நிபுணர்கள் அது மலைப்பாங்கான பகுதி என்றும், அங்கே மண் அணை கட்டுவதற்கு அவசியமில்லை என்றும் கண்டுபிடித்தார்களாம். இதனால் முன்பு செலவிடப்பட்ட அத்தனை ரூபாயும் விழலுக்கிறைத்த நீராகிவிட்டது.

அந்த **1,12,929** ரூபாய்களில் எத்தனை ஏழைகளின் வியர்வைத் துளிகள் அடங்கியிருக்கின்றனவோ? எவ்வளவு ஆயிரக் கணக்கான மக்கள் அரசாங்கத்திற்கு அந்த வரியைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக பல வேளை உணவை தியாகம் செய்திருக்கிறார்களோ?

பொதுப் பணத்தின் ஒவ்வொரு நயாபைசாவிலும் மனித இரத்தம் அடங்கி இருக்கிறது என்பதை மறந்துவிட்ட காரணத்தால் இதுபோன்ற அவமானத்துக்குரிய அக்கிரமச் செலவுகளை மிகமிகத் துணிச்சலுடனும்—'யார் இருக்கிறார்கள் நம்மைத் தட்டிக் கேட்க?' என்ற திமிரோடும் சம்பந்தப்பட்டவர்கள் செய்திருக்கிறார்கள்.

இது மலைப்பாங்கான பகுதி; எனவே இங்கு மண்ணால் அணை தேவையில்லை—என்று கண்டுபிடித்துச் சொன்னவர்களை நிபுணர்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்? அதுவும் **1,12,929** ரூபாய்களை விழுங்கிய பிறகுதான் இந்த அதி அற்புதமான கண்டுபிடிப்பு உதயமாயிற்று என்றால் அதற்குக் காரணமானவர்களிடம் அணுவளவாவது பொறுப்புணர்ச்சி இருக்கிறது என்று சொல்வது கடைந்தெடுத்த முட்டாள்தனம் அல்லவா?

இருந்தாலும், இத்தகைய 'திறமை மிகு' நிபுணர்களும், 'பொறுப்புணர்ச்சியின் சிகரங்களும்' இந்தக் 'கை தேர்ந்த' அரசாங்கத்தில் இருக்கிறார்கள் என்பதை நாம் வெட்கத்தோடு ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது!

அடுத்தது, அரசாங்கத்தின் புத்தக வெளியீட்டு இலாக்காவைப் பொறுத்தது!

இந்த இலாக்கா அரசாங்கத்தின் செய்தி இலாக்காவைப்போல் எப்படி காங்கிரஸ் கட்சியின் பிரச்சாரத்திற்காகவும், காங்கிரஸ் தலைவர்களைப் பிரபலப்படுத்துவதற்காகவும் பாடுபட்டு வருகிறது என்பது நாடறிந்த ரகசியம்தான். இந்த இலாக்காவில் செலவிடப்படும் பணத்தையும், அதனால் கிடைக்கும் ஆதாயத்தையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால், இதனால் பொதுமக்கள் வரிப் பணம் எப்படிப் பாழாகிறது என்பது நன்கு புரியும்.

அந்த வெளியீட்டு இலாக்காவிற்கு **1952**—ம் ஆண்டு பிரதி ஒன்று **15** ரூபாய்கள் விலையுள்ள **2,284** புத்தகங்கள் வந்தனவாம். அரசாங்க வெளியீட்டு இலாக்காவின் புத்தகங்களைப்பற்றித்தான் நமக்குத் தெரியுமே! வழக்கம்போல் அவைகள் விலையாகவில்லை. அதன்படி **1955**—ம் ஆண்டு, ஏப்ரல் மாதம், முதல் தேதிவரை **2,101** பிரதிகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடந்தன.

இவைகளை எப்படியாவது தள்ளிவிட வேண்டும் என்ற 'உன்னத நோக்கத்தோடு' அந்தப் புத்தகத்தின் விலை **15** ரூபாய்களிலிருந்து **5** ரூபாய்களாகக் குறைக்கப்பட்டது. அப்போதும்கூட அந்தச் சரக்கு விலைபோகவில்லை! பிறகு **1955**, அக்டோபர் முதல் தேதி யன்று விலை **3** ரூபாய்களாக்கப்பட்டது. இந்த மலிவான விலையும் வாங்குபவர்களைக் கண்டுபிடித்துக் கொடுக்கவில்லை!

எனவே, அந்தத் 'தீண்டத் தகாத ஏடு' **1956**, ஏப்ரல் முதல் தேதி முதல் **2** ரூபாய்களாகக் குறைக்கப்பட்டதாம்!

அந்தோ, பரிதாபம்! இந்த மலிவுப் பதிப்புக் காலத்தில்—இந்த மலிவு விலையில் — எவ்வளவு பிரதிகள் விற்பனையாகி இருக்கும் என்று கருதுகிறீர்கள்? எல்லாம் விற்பனையாகி, அவசர அவசரமாக அடுத்த பதிப்புக்கு ஆவன செய்தார்கள் என்று நினைக்கிறீர்களா?

அதுதான் இல்லை! மடமட வென்று இப்படி விலை குறைக்கப்பட்டும் **326** பிரதிகளே விற்பனையாயின!

மீதமிருப்பதோ **1,773** பிரதிகள்! அவற்றை இனாமாகக் கொடுத்தாலும் வாங்கிச் செல்வதற்கு அமைச்சர்களைத் தவிர வேறு ஆட்களே கிடைக்க மாட்டார்கள் என்ற நிலை போலும்! அதனால் சம்மந்தப்பட்டவர்கள் ஒரு புத்திசாலித்தனமான காரியத்தைச் செய்தார்கள். என்ன தெரியுமா? அந்தப் புத்தகங்களைப் பழைய காகிதக் கடைக்காரனிடம் போட்டுவிட்டார்கள்! அதனால், இலாக்காவிற்குக் கிடைத்த தொகை **778** ரூபாய்கள்!

இந்த பேரம் காரணமாக அரசாங்கத்திற்கு **29,616** ரூபாய்கள் நஷ்டமேற்பட்டிருக்கிறது!

ஆனால் தணிக்கையாளர் அறிக்கை, இந்த வெளியீடு—சென்னை அரசாங்கத்து வெளியீடா; அல்லது மத்திய அரசாங்கத்து வெளியீடா—என்று குறிப்பிடவில்லை!

"அந்த வெளியீட்டு இலாக்கா அந்த **2,284** பிரதிகளை எப்படிப் பெற்றது? அவைகளை வேண்டுமென்று எழுதிப் பெற்றதா? அப்படியெனில் இதுபோன்ற சந்தேகத்திற்குரிய விற்பனை கொண்ட புத்தகத்தை 'ஆர்டர்' செய்ததற்கு யார் பொறுப்பாளியாவது? இது ஒரு அரசாங்க வெளியீடு என்றால் யாருடைய அனுமதியின் பேரில் இரண்டாயிரத்துக்கு அதிகமான பிரதிகளை அச்சிட்டார்கள்? இதனால் அரசாங்கத்துக்கு **29,616** ரூபாய்கள் நஷ்டம் ஏற்பட்டது என்றால், இந்த நஷ்டமான பேரத்தினால் லாபமடைந்தவர்கள் யார்?..."

—இப்படி எல்லாம் அடுக்கடுக்காய் கேள்வி கேட்டிருக்கிறது 'இந்து' ஏடு!

அரசாங்கம் வியாபாரியாக மாறி, பொதுப் பணத்தை வாரி இறைக்கிறது என்றால், அந்த பேரம் எப்படி செயலாற்றப்படுகிறது என்பதை தெரிந்து கொள்வதற்கு பொது மக்கள் அனைவருக்கும் உரிமையுண்டு. தக்கதொரு விசாரணை நடத்தி, அரசாங்கம் உண்மையை வெட்ட வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதில்தான் அதன் நேர்மை வெளியாக முடியும்.

இதைப்போலத்தான் பல துறைகளிலும்! அரசாங்கம் 'ஆயில் இன்ஜின்'களையும், குழாய் 'செட்டு'களையும் விவசாயிகளுக்கு வாடகைக்குக் கொடுப்பதற்கென ஒரு புதிய திட்டம் தயாரித்தது. விவசாயிகளுக்கு உதவி செய்வதற்கென்றே நடத்திய இந்த பேரத்தினால் அரசாங்கத்திற்கு எந்த விதமான லாபமோ நஷ்டமோ கிடைக்காது என்று முடிவு செய்யப்பட்டது.

ஆனால், நடந்ததோ அதற்கு நேர்மாறு! ஒருவேளை லாபம் கிடைத்து விட்டதோ என்று சந்தேகப்படாதீர்கள். மொத்தம் ஏற்பட்ட நஷ்டம் மட்டும் **3.72** லட்சங்கள்!

இதைத் தவிர **1955—56**—ம் ஆண்டில் 'டிராக்டர்'களை வாடகைக்கு விடும் திட்டப்படி **7.49** இலட்ச ரூபாய்கள் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது!

மற்றும், உபரி பாகங்கள் மட்டும் தேவைக்கு அதிகமாக வாங்கப்பட்டிருக்கின்றன.

திட்டங்களை நிறைவேற்றுவதற்காக மாநில அரசாங்கங்கள், தங்கள் வருமானத்தை பல விதங்களிலும் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்று கூப்பாடு போடப்படுகிறது!

—இதுதான் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளும் விதமா? இதையெல்லாம் அரசாங்கம் எப்போதுதான் தடுக்கப் போகிறது? தணிக்கையாளர் அறிக்கை கண்டு பொது மக்கள் திருப்தி அடையும் காலம்தான் எக்காலம்? — இப்படித்தான் நாம் கேள்வி கேட்க வேண்டியவர்களாயிருக்கிறோம்! ஃ

சென்ற இதழில்...

'கோயில் காளை சிவாவை அடக்குபவனுக்கே பொன் மணி' என்று சுருளிமலை அறிவிக்க — பஞ்சாயத்தார் பரமசிவம், பூஞ்சோலையம்மாள் இருவரும் ஒபபுதல் தர —தீச்சட்டி சிங்காரம, கரகமாடிக் கண்ணன் இருவரும் போட்டிக்குத் தயாராகின்றனர்...

பொன்மணி வேதனையால் தவிக்கிருள். அதைக் கண்ட பூஞ்சோலை மகளைக் காரணம் கேட்கிருள். பொன்மணி ஆசிரியர் அறவாழியின்மேல் தான் கொண்டுள்ள காதலை வெளியிடுகிருள்...

மகளின் வாட்டத்தைப் போக்க மார்க்கம் காணுது பூஞ்சோலை தவித்த நேரத்தில், போட்டியில் அறவாழியும் கலந்து கொள்ளப் போகிருன் என்ற செய்தியை வெளியிடுகிருன் சுருளிமலை...

போட்டி முடிவு என்னவாகுமோ—தன் மண வாழ்க்கை எந்தத் துணையுடன் துவங்க இருக்கிறதோ என்று பொன்மணி திகிலுடன் காத்திருக்க குறிப்பிட்ட போட்டி நாளும் வருகிறது...

சிற்றூர் மாரியம்மன் கோவில் திடலில் உள்ளூர், வெளியூர் மக்கள் திரளாகக் கூடியிருக்க போட்டி துவங்குகிறது...

சீட்டுக் குலுக்கி எடுத்த முடிவின்படி முதலில் சிங்காரம் காளையுடன் களத்தில் குதிக்கிருன். உக்கிரமான போராட்டத்தின் முடிவில் காளை தன் கூரிய கொம்புகளால் சிங்காரத்தின் தொடையைக் கிழித்துவிட அவன் தோல்வியுறுகிருன்...

அடுத்து கண்ணன் போருக்குத் தயாராகிருன். பொன்மணி தனக்கே கிடைக்க வேண்டும் என்ற ஆவலால் முழு பலத்துடன் போரிட்ட அவனையும் இரத்த வெள்ளத்தில் மிதக்க விடுகிறது, கோயில் காளை சிவா. அவனும் தோல்வியுறுகிருன்...

இருவரையும் மருத்துவர்கள் சிகிச்சைக்காகத் தூக்கிச் செல்கின்றனர்...

இறுதியில் அறவாழி மட்டுமே பாக்கி நிற்க — "என்னை மறந்து விடுங்கள்! இந்தப் போட்டி உங்களுக்கு வேண்டாம்!" என்று திடீரென்று அவன் காலில் விழுந்து கதறுகிருள் பொன்மணி...

* * *



அண்ணனும் தோற்றுவிட்டான்—கண்ணனும் தோற்றுவிட்டான் என்றதும் கற்பூரத்திற்கு ஒரே குழப்பமாகி விட்டது உள்ளம். கண்ணன் உயிர் பிழைப்பானு என்ற கவலை இப்போது அவளைச் சூழ்ந்து கொண்டது. போட்டியின் முடிவைப் பற்றி அவள் அறிவதற்கு ஆவல் கொண்டிருந்தாலும் அங்கு நிற்காமல் கண்ணனைப் பார்க்க ஓடிவிட்டாள்.

கண்ணன், விழிகளைத் திறக்காமல் பிணம்போல் கிடந்தான். மருத்துவர்கள் ஓடியாடித் தங்கள் திறமையைக் காட்டிக் கொண்டிருந்தார்கள்.

சிங்காரம் ஆபத்தான நிலைமையில் இல்லாவிட்டாலும் வலி பொறுக்க முடியாமல் கத்திக் கொண்டிருந்தான்.

கற்பூரம் இருவரையும் பார்த்துப் பார்த்து கண்ணீர் விட்டபடி அங்கு நின்று கொண்டிருந்தாள். அண்ணன் பக்கத்திலே அவளுக்கு நெருங்குவதற்குப் பயம்—என்ன சொல்லி விடுவானே என்ற அச்சம்!

இப்படி இக்கட்டான நிலையில் தவித்துக் கொண்டிருந்த அவள் காதில் மாரியம்மன் திடலில் ஒலித்துக் கொண்டிருந்த பறை முழக்கம் சற்று வேகமாகக் கேட்டது.

வலியினுல் அவதிப்பட்டுக் கொண்டிருந்த சிங்காரம், "என்ன? அறவாழி போட்டியில் குதித்துவிட்டானு?" என்று தனக்குத் தானே உரக்கக் கேட்டுக் கொண்டான்.

அவன் நினைத்தபடியே அறவாழி, காளையுடன் போருக்குத் தயாராகிவிட்டான்! பொன்மணியோ அவன் காலடியில் கிடந்தவாறு, "என்னை மறந்து உயிர் வாழுங்கள்" என்று கெஞ்சிக் கொண்டிருந்தாள்.

இதைக் கண்ணுற்ற ஒரு பெரியவர், "இனிமேல் எதற்காகப் போட்டி? போட்டி போட்டவர்கள் இருவருந்தான் தோற்றுவிட்டார்கள். பொன்மணி, அவளுக்கு இஷ்டமானவனைக் கட்டிக் கொள்ளட்டுமே!" என்ருர்.

உடனே பஞ்சாயத்தார் பரமசிவம் அதை மறுத்தார். "போட்டியில் ஜெயித்தவன்தான் பொன்மணியை அடையலாம் என்பது பொதுவான பந்தயம். அதை மாற்றக் கூடாது!" என்பது அவரது வாதம்.

அறவாழி, அந்த வாதத்தை ஏற்றுக் கொண்டான். பொன்மணியினுல் முடியவில்லை. எப்படியாவது அறவாழியின் உயிரைக் காப்பாற்றிவிட வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு அவனுக்கு நேரே நின்று தைரியத்தோடு எதிர்த்தாள்.

அறவாழி, அவளைப் பார்த்து "பொன்மணீ...! என்னைக் கோழையாக்காதே!" என்று கத்தினுன்.

அதற்குள் சுருளிமலை காளையை சற்றுக் காலாற்றி ஓய்வளித்துக் கொண்டு வருவதற்காக ஓட்டிக் கொண்டு புறப்பட்டான்.

பொன்மணி, சுருளிமலையிடம் சென்று "தம்பி! காளையோடு எங்கேயாவது ஓடிவிடு! அவரைக் காப்பாற்று!" என்று காதோடு காதாகக் கெஞ்சினுள்.

"அக்கா! பயப்படாதே! உன் இஷ்டப்படி எல்லாம் நடக்கும்" என்று சுருளிமலை பதில் கூறிவிட்டுக் காளையுடன் போனுன். காளையும் அவனுமாக வேப்பமரத்தடிக்குச் சென்ருர்கள். சுருளிமலை காளையின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கண்களிலிருந்து ஆறெனப் பெருகிற்று நீர்! காளையை அங்கேயே நிற்க வைத்துவிட்டு அருகேயுள்ள தோட்டத்து வேலிப் பக்கம்போனுன். அங்கே முளைத்துக் கிடந்த ஒரு விதப் பச்சிலையைப் பறித்தான். அதை ஏன் அவன் பறிக்கிருன்? அந்தப் பச்சிலை விஷ மூலிகை ஆயிற்றே? மாடுகளைக் கொல்லக் கூடிய சக்தியுடைய பச்சிலையாயிற்றே அது! அதை அவன்

தயாராகிறது,

முத்தாரம்

21-வது இதழ்!

பன்மொழிப் புலவர்
கா. அப்பாதுரை
இராதாமணாளன்
பி. சி. கணேசன்
முல்லை சத்தி
ஆகியோரின் எழுத்தோவியங்களுடன்

ஆசிரியர் மு. க. வின்
கவிதை நடைச் சிறுகதை!

இன்றே விற்பனையாளரிடம் உங்கள் பிரதிக்குச் சொல்லி வைபுங்கள்!

பறிக்க வேண்டிய அவசியம் என்ன?

கை நிறைய இலைகளைப் பறித்துக் கொண்டு சிவாவிடம் வந்தான். சிவாவின் முதுகைத் தட்டிக் கொடுத்தான். அது அவனை நக்கிற்று. காளையையே உற்றுப் பார்த்தான். பிறகு, கையிலிருந்த இலைகளை அதன் வாயில் நீட்டினான். அது தயங்கிற்று. ஆனால் அவன் விடவில்லை. சற்றுப் பிடிவாதத்துடன் இலைகளை அதன் வாயில் திணித்தான். காளை, மறுக்காமல் அவைகளை விழுங்கிற்று. சுருளிமலை விக்கி விக்கி அழுதவாறு, அதன் கழுத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்டான். காளைக்கு ஒன்றும் புரியவில்லை. அசையாமல் நின்று கொண்டிருந்தது.

சுருளிமலை, காளையைப் பார்த்து "கண்ணே சிவா!" என்றான் மெதுவாக. பிறகு ஓங்கிக் கூச்சலிட்டான். ஒரு சமயம் சிவாவை அவன் பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றியிருக்கிறான். அது முதல்தான் சிவா அவனுக்கு நண்பனாயிற்று!

ஒரு வயலில் இறங்கி விளைச்சலைக் கெடுத்து விட்டு சரியானபடி சேற்றில் சிக்கிக் கொண்டு தவித்த சிவாவை ஏழெட்டு முரடர்கள் கூடி அடி அடியென்று அடித்துத் தள்ளினார்கள். அப்போது சுருளிமலைதான் ஓடிப்போய் அவர்களையெல்லாம் விலக்கி காளையை மீட்டுக் கொண்டு வந்தான். அது முதல் சிவாவும் அவனும் இணைபிரியாதவர்களாகி விட்டார்கள்! முரட்டு மனிதர்களிடம் சிக்கிய சிவாவைக் காப்பாற்றிய சுருளிமலை இப்போது அதைக் கொல்லவே தீர்மானித்து விட்டான்!

ஏன்?

தன் அக்காளுக்காக!

அறவாழியின் உயிரைக் காப்பாற்றுவதற்காக!

அவனால் அழக்கூட முடியவில்லை. சிவாவை ஓட்டிக் கொண்டு திடலுக்கு வந்தான். அறவாழி முன்னே கொண்டு போய் நிறுத்தினான். பறையொலி தீவிரமாக முழங்கிற்று.

அறவாழி, காளையை எதிர்க்கத் தயாரானான். பொன்மணி, மயக்க முற்றுக் கீழே விழுந்தாள். காளை அறவாழியின் மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தது. அவன் சமாளித்துக் கொண்டு விலகினான். நெடுநேரம் சண்டை! கூடியிருந்தார் வியக்கும் வண்ணம் அறவாழி காளையிடம் போரிட்டான். நாலைந்து முறை அறவாழியின் வயிற்றைக் கிழித்து ஆளையே நசுக்கிவிடும் என்று அஞ்சக் கூடிய அளவுக்கு அவன்மீது பாய்ந்த காளை குறி தவறித் தரையிலே தலையை மோதிக் கொண்டது.

சுருளிமலை கொடுத்த மருந்து வேலை செய்யத் தொடங்கி விட்டது போலும்!

அறவாழியும் காளையின் பலவீனத்தை உணர்ந்து கொண்டு அதை அதிகமாக ஆட்டிப் படைத்தான். ஓடவைத்தான். பாயவைத்தான். தரையை முட்டவைத்தான். அறவாழியின்மீது பாயும் போதெல்லாம் காளை சுழன்று சுழன்று கீழே விழுந்து எழுந்தது. நெடுநேரம் போராட்டத்திற்குப் பிறகு, அறவாழி அதன் கொம்புகளைப் பிடித்துக் கொண்டு முதுகில் ஏறி உட்கார்ந்தான். ஒரே மகிழ்ச்சி! ஆரவாரம்! பறையொலி முழங்கிற்று, உற்சாகமாக!

பொன்மணி, கண் விழித்துப் பார்த்தாள். அறவாழி ஜெயித்து விட்டான்! அவனைச் சுமந்து நின்ற காளை கீழே விழுந்தது. எல்லோரும் காளையிடம் ஓடிவந்தார்கள் — காளை செத்துவிட்டது! சுருளிமலையின் ஆருயிர் நண்பன் தன் ஆட்டபாட்டத்தையெல்லாம் அடக்கிக் கொண்டு சவமாகக் கீழே கிடந்தான்!

பொன்மணி, அறவாழியிடம் ஓடினாள். அறவாழி, சுருளிமலையைத் தேடினான். அவன் அங்கு இல்லை. பொன்மணியை அழைத்துக் கொண்டு சுருளிமலையைத் தேடுவதற்கு வேப்பமரத்தடிக்கு ஓடினான். சிவா இறந்து விட்டதற்காக அவனிடம் மன்னிப்புக் கேட்கவே அவன் ஓடினான்.

வேப்பமரத்தடியில் அவர்கள் கண்ட காட்சி! அய்யோ! சுருளிமலையின் புல்லாங்குழல் கீழே கிடந்தது! பொன்மணி, அண்ணாந்து பார்த்தாள்! சுருளிமலை மரக் கிளையில் பிணமாகத் தொங்கிக் கொண்டிருந்தான்! அக்காளின் நல் வாழ்வுக்காகத் தம்பி தன் தோழனையும், தோழனின் பிரிவுக்காகத் தன் உயிரையும் இழந்தான்!

இனி என்ன? பொன்மணியும் பூஞ்சோலையும் அழுதனர்; புலம்பினர்!

பொன்னையாவினுடைய கல்லறைக்கு அருகே சுருளிமலைக்கு ஒரு கல்லறை — அவன் கல்லறைக்கு அருகே கோயில் காளை சிவாவுக்கு ஒரு கல்லறை!

கண்ணன், உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தான். சிங்காரம் சிறுகச் சிறுகப் பிழைத்துக் கொண்டான். கிழிக்கப்பட்ட வயிற்றிலிருந்து வடிந்த குருதியின் வழியாக வஞ்சக நினைவுகள் போய்விட்டதுபோல் கண்ணன் வாயிலிருந்து நல்ல வார்த்தைகள் வெளிப்பட்டன. சிங்காரத்தின் காலில் விழுந்து தன் தவறுக்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். சிங்காரமும் அவனை மன்னித்து விட்டான். பிணமாகத் தொங்கிய மைனாவின் முந்தானையில் சிங்காரத்தின்மீது பழி சுமத்திக் கடிதம் எழுதியதும் தானே தான் என்பதைக் கண்ணன் ஒப்புக் கொண்டான். தன் நெஞ்சிலே இருந்த பாரங்கள் இறங்கியதால் மன நிம்மதியே மருந்தாகி அவன் உயிரைக் காப்பாற்றியது. பிறகு கற்பூரத்தின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

கழுதை ஊர்வலம் நடத்துவதாகச் சபதம் செய்த சிங்காரம், "கற்பூரம் — கண்ணன்" கல்யாண ஊர்வலத்தை நடத்தி மகிழ்ந்தான்!

தந்தையையும்— தம்பியையும் இழந்த பொன்மணி, தாயின் அன்பிலும் அறவாழியின் முகங் காண்பதிலும் ஆறுதல் கொண்டு வாழ்வதற்குத் துணிந்தாள்!

பஞ்சாயத்தார் பரமசிவம் அனைவரையும் வாழ்த்துவதற்குத் தயாராய் வந்து சேர்ந்தார்!

[முற்றிற்று]

கணக்கு தருகிறார்; கண்களை மறைக்கிறார்!

"தென்னிந்தியாவில் மிகச் சிறுபான்மையினர் இந்தி மொழியை எதிர்த்து வந்தாலும்கூட, மிகவும் அதிக எண்ணிக்கை கொண்ட மக்கள் அதை விரும்பியே கற்று வருகின்றனர்..."

—மத்திய அமைச்சர்
பி. என். தத்தார்

"இந்தியின் முன்னேற்றம் இந்தியாவின் முன்னேற்றம்— அதன் வளர்ச்சியை எப்பகுதி மக்களும் எக்காலத்திலும் தடுக்க முடியாது!..."

—பஞ்சாப் கவர்னர்
என். வி. காட்கில்

—சமீப காலத்தில் வடக்கே இருந்து எழும்புகிற குரல்களில் எல்லாம் அசாதாரணமான துணிச்சலும், அப்பட்டமான புளுகும் நெளிந்தோடுவதை நாம் தினமும் கண்டு வருகிறோம்!

அப்படிப்பட்ட திமிரான சொற்றொடர்களில் சில வற்றைத்தான் மேலே குறித்திருக்கிறோம்!

இந்திய அரசாங்கம் துப்பாக்கியையும் சட்டத்தையுமே இன்றைய தினம் நம்பிக் கிடக்கிறது; அதன் நிழலிலே வாழ்வோரோ வீண் வாய் வீச்சுகளையும், 'மாயா ஜால' வார்த்தைகளையுமே நம்பவேண்டிய பரிதாபகரமான நிலைக்குத் துரத்தப்பட்டிருக்கிறார்கள்!

குறிப்பாக இந்தி வெறியர்கள் 'இனி நம்மை அசைக்க முடியாது' என்ற தைரியத்தில், இந்திப் பெண்ணுக்கு மகுடம் புனைந்து அரியணையில் அமர்த்தி விட்டதாகக் கற்பனையில் கண்டு ரசித்துக் கொண்டு திருப்தி அடைந்து வருகிறார்கள்.

தென்னிந்தியாவில் இந்தியை மிகப் பெரும்பான்மையான மக்கள் கற்று வருகின்றனர்—மத்திய அமைச்சரவையிலே வீற்றிருக்கும் உள்நாட்டுத் துறையைச் சேர்ந்த அமைச்சர் தத்தார் இப்படிக் குறிப்பிடுகிறார்!

ஆனால் உண்மை நிலை என்ன என்று ஆராய்கிற நேரத்தில் அமைச்சரது அந்த சொற்கள் காட்டுக் கெரித்த நிலவாகத்தான் போய்விடுகின்றன! ஆற்றில் கரைத்த புளியாகத்தான் மாறிவிடுகின்றன!

இந்தி எக்காரணத்தைக் கொண்டும் பொதுமொழியாகிவிட முடியாது; அதற்கான எந்த அருகதையும் அது பெற்றிருக்கவில்லை!

இந்த உண்மையை வெளியிட்டு, இந்தி வெறியர்களுக்கு சவால் விட்டு வருவது தென்னகத்தில் ஒரு சிறு பகுதியினரல்ல; பல்வேறு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்—பொதுப் பணியில் ஈடுபட்டவர்கள் — அறிவு

[தொடர்ச்சி பக்கம்—8]

வெற்றி முழக்கமிடும்
இரண்டாவது வாரம்!

(தி. மு. க. வார இதழ்)
அண்ணா
ஆசிரியர்:
டி. என். இராவணன்

தூத்துக்குடி தந்த தங்கம்—பகுத்தறிவு சிங்கம்—
தொழிலாளர் தலைவன்—தன்மான வீரன்
திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாபெரும் தொண்டன்

கே.வி.கே. சாமி நினைவு மலர்

அக்டோபர் 3—ல் வெளிவருகிறது.

விலை 25 காசு

அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், மற்றும் இயக்கத் தலைவர்களின் கருத்தோவியங்களுடனும் —அழகான வண்ண முகப்புடனும் வெளிவருகிறது.

தேவையான பிரதிகளுக்கு 25 சதவீதம் நீக்கி முன் பணத்துடன் ஏஜண்டுத் தோழர்கள் விண்ணப்பிக்க வேண்டும்.
தனிப் பிரதி வேண்டுவோர் 33 காசு தபால் தலை அனுப்பவும்.

விவரங்களுக்கு:— 'அண்ணா' —சென்னை—31

சுழல் விளக்கு...

[7—ம் பக்கத் தொடர்ச்சி]

'பத்ம விபூஷண்' பட்டம் கொடுத்தாலும் நாம் ஆச்சரியப் படுவதற்கில்லை!

இந்தியா அகில உலக அரங்கத்தில் கியாதி அடைவதற்கு இந்த சம்பவம் ஒன்று போதாதா என்றுதானே எண்ணத் தோன்றுகிறது!

பாவம்; ஏழை இந்தியர்கள்!

●

உயிருக்கு இங்கென்ன மதிப்பு?

இப்படியெல்லாம் இமயமலை போல் ஊழல்கள் உயர்ந்து கொண்டிருக்கும் நேரத்திலே நாட்டுக்கு மிகவும் அத்யாவசியமான பொருள்களை இறக்குமதி செய்வதிலே கட்டுப்பாடுகளை விதித்த வண்ணம் இருக்கின்றனர் ஆட்சியினர்.

ஒரு மருத்துவ மனை என்றால் அங்கே நோயாளிகளுக்கு தக்க நேரத்தில் நல்ல மருந்துகள் கிடைக்கச் செய்வதுதான் முதல் இலட்சணமாக இருக்க வேண்டும்!

நமது சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியின் நிலைமை தெரியுமா? உயிரைப் பாதுகாக்கக் கூடிய மருந்துகள் அங்கே கிடைக்கவில்லையாம்!

—இப்படி டாக்டர்கள் புகார் கூறுகின்றனராம். இது உண்மையா என்று சட்டசபையில் கேட்கப்பட்ட கேள்விக்கு மந்திரி மாணிக்கவேலர் என்ன தெரியுமா பதில் சொல்லியிருக்கிறார்?

இறக்குமதி கட்டுப்பாடு காரணமாகத்தான் இந்த நிலைமை நீடிக்கிறது என்று அச்சமின்றி ஒப்புக் கொண்டிருக்கிறார்.

பொது மக்களின் உயிருக்குத் தரும் மதிப்பைவிட அந்நிய செலாவணிக்கு அதிக மதிப்பு தரும் ஒரு நாடு இருக்கிறதென்றால் அது இந்த கேடுகெட்ட பாரதமாகத்தான் இருக்க முடியும் என்பதற்கு இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

இதில் வேடிக்கை என்னவென்றால், அந்த மருந்துகளின் இறக்குமதிக்காக போதிய அளவு அயல் நாட்டு செலாவணியை அனுமதிக்கும்படி சென்னை அரசாங்கம் மத்திய அரசாங்கத்துக்கு எழுதியிருந்ததாம்! இது உயிரைப் பொறுத்த அவசிய விஷயமாக இருந்தும் இதுவரையில் மத்திய அரசிடமிருந்து பதிலே வரவில்லை!

இந்த ஆமைவேக துரைத்தனத்தை என்னவென்று சொல்வது? இதற்குப் பெயர்தான் மக்கள் நல ஆட்சியா? மருந்து இல்லாமல் ஜெனரல் மருத்துவ மனையில் உயிர் துறக்க இருப்போரே; பார்த்துக் கொள்ளுங்கள்!

●

வாழ்க, அந்தக் கூட்டுணர்ச்சி!

ஆந்திர—கேரளா—கன்னட நாடுகளில் திராவிடப் பிரிவினை உணர்ச்சி அவ்வளவாக வேரூன்றி வளரா விட்டாலும், தென்னகம் தொழில் துறையில் வடக்கத்தியரால் புறக்கணிக்கப்படுகிறது என்கிற உணர்ச்சி இருள் கிழித்து வெளிக் கிளம்பும் உதயசூரியன்போல் ஒளி விட்டுப் பிரகாசிக்கிறது.

அந்த உணர்ச்சியின் பிரதிபலிப்பைத்தான் பெங்களூரில் நடைபெற்ற தென்னிந்திய வணிகர் சங்கங்களின் கூட்டு மாநாடு வற்புறுத்துவதாக இருக்கிறது.

இது சென்னை, ஆந்திரம், கேரளம், மைசூர்—ஆகிய மாநிலங்களிலுள்ள வணிகர் சங்கங்கள் எல்லாம் ஓரணியில் சேர்ந்து நடத்துகிற முதல் மாநாடு என்பதை கவனிக்கும் போது அது தெரிவிக்கின்ற கருத்துக்கள் தனிச் சிறப்பைப் பெறுகின்றன.

மாநாட்டிற்குத் தலைமை வகித்த மைசூர் வணிகச் சங்கத் தலைவர் சாரங்கபாணி அவர்கள் தொழில் துறையில் தென் மாநிலங்கள் மத்திய அரசாங்கத்தாரால் எப்படியெல்லாம் உதாசீனப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன என்றும், அவைகளை களைந்தெறிய உடனடியாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் வற்புறுத்தியிருக்கிறார்.

மாநாட்டைத் துவக்கி வைத்த மைசூர் முதலமைச்சர் குறிப்பிட்டதாவது:

"இயற்கையாக உள்ள மூலப் பொருள்களைப் பயன்படுத்துவதற்கும், வெவ்வேறு பகுதிகளில் தொழில்களை வளர்ச்சியடையச் செய்வதற்கும் இங்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது"

—இதுபோலவே ஒவ்வொரு மாநிலத்திலிருந்து வந்த பிரதிநிதிகளும் இப்படி ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் தென்னகத்தின் சார்பாக இரத்தக் கண்ணீர் வடித்திருக்கின்றனர்.

மின்சார வசதி—நீர்ப்பாசனம்—சாலை, ரயில் போக்கு வரத்து—கனரகத் தொழில்கள்-இவை எல்லாவற்றிலும் தென் பிராந்தியம் கவனிக்கப்படவில்லை என்று ஒரு முகமாக, மாற்றாந்தாய் மனப்பான்மை கொண்ட வடக்கத்தி சர்க்காரை வன்மையாகக் குற்றம் காட்டியிருக்கிறார்கள்.

தென்னக மாநிலங்களிலே எற்பட்டிருக்கும் ஒற்றுமை உணர்ச்சியும், தற்காப்பு உணர்ச்சியும் மேலும் மேலும் வளரும்; அது பிரிவினைக்கேற்ற நல்லதொரு கூட்டுச் சக்தியாக உருவாகும் என்பதற்கு மேலும் ஓர் அடையாளம்!

அந்தோ... பரிதாபம்!



ஏட்டளவில் திட்டங்களைப் போட்டு விட்ட இந்திய சர்க்கார், அவைகளை நிறைவேற்ற 'கடன்; கடன்' என்று அலைகிற காட்சியை இப்படிச் சித்தரித்திருக்கிறது 'சங்கர்ஸ் வீக்லி'

உண்மையை உணர்ந்தார்கள்!

'வடக்காவது; தெற்காவது? எல்லாம் ஒன்றுதான்!' என்று கூறுபவர்களுக்கு புத்தி புகட்டி 'வடக்கு வடக்குதான்; தெற்கு தெற்குதான்! அவற்றுக்கிடையில் ஆழ்கடல் போன்ற பேதமிருக்கிறது!' என்று எடுத்துக் காட்ட சமீபத்தில் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்திய அரசாங்கத்தின் செய்தி இலாக்காவின் காரியதரிசியான ஜி. ராஜகோபாலன் எர்ணாகுளத்தில் பத்திரிகை நிருபர்களுக் கெல்லாம் பேட்டியளித்தார். அப்போது, இந்திய செய்திப்பட இலாக்காவை இரண்டாகப் பிரித்து, ஒன்றை வடநாட்டிலும், மற்றதை தென்னாட்டிலும் ஏற்படுத்துவது பற்றி ஆலோசித்து வருவதாகக் கூறினார்.

வடநாட்டில் பலருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கிறது, இச்செய்தி.

"இப்போது ஒன்றாக இருப்பதால் என்ன நஷ்டம் வந்துவிட்டது? அதை ஏன் இரண்டாக வெட்ட வேண்டும்?" -இப்படியெல்லாம் அங்கிருந்து கூக்குரல் கிளம்புகின்றன.

வீடு எப்போது இரண்டாகிறது? பாகப் பிரிவினை எப்போது ஏற்படுகிறது? மீண்டும் சுமுகமான உறவு இருக்க முடியாது என்கிற நிலை ஏற்படுகிற நேரத்தில் — மனஸ்தாபங்கள் மலிந்து வருகிற நேரத்தில்—ஒன்று சேர்ந்து வாழ முடியாத நிலைமை உருவாகிற நேரத்தில்!

வீடு இரண்டானாலோ, அல்லது பாகம் பிரிந்தாலோ அங்கு ஒற்றுமை இல்லையென்றுதானே பொருள்?

ஆமாம்; இந்தியச் செய்தி இலாக்காவிலும் அப்படித்தான்! 'தென்னகம் புறக்கணிக்கப்படுகிறது' என்ற கூக்குரல் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே வந்தது.

தமிழகத்திலே புயல் வீசிய போது உடனடியாகச் சென்று செய்திப் படங்களைப் பார்த்தோம்—அதில் பாதிக்கப்பட்ட பிராந்தியங்களைக் காண முடியவில்லை!

இந்திய சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தலைவர்களைக் காட்டினார்கள். அதில் கையில் கொடியுடன் — மெய்யில் காயம் தாங்கி — வையக வாழ்வு நீத்த திருப்பூர் குமரனைக் காணோம்!

செக்கிழுத்து செத்துப்போன சிதம்பரம் இல்லை!

நீடுதுயில் நீக்கப் பாடிவரும் பெருநிலவாம் பாரதியைப் பார்க்க முடியவில்லை!

ஆச்சாரியாரைக்கூட மறந்து விட்டார்களே என்று 'ஆனந்த விகடன்' அழுது புலம்பிற்று!

—இவ்வளவு குறைகளையும் ஒன்றாக இருந்தால் தீர்த்து வைக்க முடியாது என்பதை உணர்ந்து; அதைத் தீர்த்து வைப்பதற்காக இரண்டாக்குகிறார்கள், புத்திசாலிகள்!

இப்போதாவது அவர்கள் தங்களது முடியாமையை உணர்ந்து கொண்டமைக்காக நமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வோமாக!

●

யுத்தமின்றி அழிந்த போர் விமானங்கள்!

இந்தப் பரந்த பாரத் வர்ஷத்தில் குழந்தை உற்பத்தியும், விபத்துகளும் மிகவும் அதிகம்!

தரையிலே ரயில் விபத்துகள்—வானத்திலே விமான விபத்துகள்! அநேகமாக இவை அன்றாட நிகழ்ச்சிகளாகி விட்டன!

உதாரணமாக, இந்திய உப கண்டத்திற்கு சிறிய அளவில் அமைந்த விமானப்படை ஒன்று இருக்கிறது. அதில் ஒன்பது போர் விமானங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு நேர்ந்த கதியைப் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமா?

இதோ, அந்த விபரங்கள்:

1957-ம் ஆண்டு, செப்டம்பர் 12-ம் தேதியன்று, 'டவ்' என்ற விமானம் முக்கிரி என்ற இடத்தில் விபத்திற்குள்ளாகி நான்கு பேர் மறைந்தனர்!

1958-ம் ஆண்டு, பிப்ரவரி 6-ம் தேதியன்று, 'லிபரேட்டர்' என்ற விமானம் கோயமுத்தூருக்கு அருகில் விபத்துக்குள்ளாகி பத்து பேரைக் கொன்றது!

1958—ம் ஆண்டு, மார்ச் 21—ம் தேதியன்று அம்பாலா அருகில் இரண்டு ஜெட் விமானங்கள் மோதிக் கொண்டன!

1958—ம் ஆண்டு, மே 8—ம் தேதியன்று 'வேம்பயர்' ஜெட் விமானம் சப்தர்கஞ்ச் நிலையத்தில் விபத்துக்குள்ளாகி ஆறு பேர் இறக்கவும், பனிரெண்டு பேர் காயமடையவும் 'டெல்லி பயிற்சிக் கூடம்' நாசமடையவுமான நிலைமை எற்பட்டது!

அதே தினத்தன்று, 'ஒரிகன்' என்ற விமானம் விபத்துக்குள்ளாகி விமானமோட்டியும், தரையிலே விளையாடிக் கொண்டிருந்த இரு குழந்தைகளும் இறந்தன!

1958—ம் ஆண்டு, ஜுலை 23—ம் தேதியன்று வானவ்டி என்ற இடத்தில் ஒரு ஜெட் விமானம் விபத்துக்குள்ளாகியதால் விமானமோட்டி இறந்தார்!

1958—ம் ஆண்டு, ஆகஸ்ட் 1—ம் தேதியன்று 'கேன்பரா' விமானம் மிதுனப்பூர் அருகில் உடைந்தது!

1958—ம் ஆண்டு, ஆகஸ்ட் 4—ம் தேதியன்று 'வேம்பயர்' விமானம் ஹிமயத் நகரில் விபத்துக்குள்ளாகி இருவரைச் சாகடித்தது!

—ஆக, இந்திய விமானப் படையைச் சேர்ந்த ஒன்பது போர் விமானங்களில் எட்டு விமானங்களின் கதி இப்படி ஆகிவிட்டது!

இதைத் தவிர, சென்ற ஆண்டு மேலும் பல போர் விமானங்களை அரசாங்கம் வாங்கியிருக்கிறதாம்! விரைவிலே இது போன்ற பட்டியலை எதிர் பாருங்கள்!

'மாமழை போற்றுதும்'!

மழை பெய்தால் குடியானவர்களுக்குத்தான் லாபம் என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், இந்த இருபதாம் நூற்றாண்டில், இந்த இந்திய உப கண்டத்தில் அதிக மழையைக் காரணமாகக் கொண்டு லாபமடைவதற்கு ஒரு கூட்டத்தாரே இருக்கின்றனர்.

உதாரணமாக, சென்ற ஜுலை 20-ம் தேதியன்று, டெல்லி மாநகரத்தில் 24 மணி நேரத்திற்குள் 10-48 அங்குல மழை பெய்தது. அதன் விளைவாக, ஒக்லா சாலைக்கென்று இரண்டு கோடி ரூபாய்களில் ஒரு மாதத்திற்கு முன்பு கட்டப்பட்ட ஒரு மேல் பாலம் பாழாகி விட்டதாம்!

இந்த வேடிக்கையை என்னவென்று சொல்வது?

ஒரு மாத வயதுடைய—இரண்டு கோடி ரூபாய்களை வாயில் போட்டுக் கொண்ட—ஒரு மேல் பாலம் சுமார் பத்து அங்குல மழையைக்கூடத் தாங்கமுடியவில்லை!

சீனாவிலே எப்போதோ கட்டிய நெடுஞ் சுவரின் பகுதிகள் இன்னும் அழியாமல் இருக்கின்றன என்று கேள்விப்படுகிறோம். அவ்வளவு ஏன்? மொகலாயர் காலத்தில் கட்டப்பட்ட செங்கோட்டை இருக்கும் இடத்தில்தான் இந்த மேல் பாலமும் கட்டப்பட்டது!

பத்து அங்குல மழையால் அவைகள் எல்லாம் பழுதடையவில்லை. ஆனால், நவீன மூளையையும் நவீன இயந்திரங்களையும் கொண்டு கட்டப்பட்ட இந்த மேல் பாலமோ பொடிப்பொடியாகி இருக்கிறது!

இப்படிப்பட்ட அரிய சாதனையைச் செய்துகாட்டிய அந்தப் பொறியியல் நிபுணர்களுக்கு அரசாங்கம் அடுத்த ஆண்டு

[தொடர்ச்சி பக்கம்—6]

உங்கள் பார்வை!

ஆராய்ச்சித் துறையில் ஆல கால விஷம்!

அன்புள்ள ஆசிரியருக்கு,

தமிழ் நாட்டில் உள்ள ஒரு முக்கியமான பல்கலைக் கழகத்தைப் பற்றிய செய்தி ஒன்றைப் பொது மக்கள் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன். சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு 'திராவிட மொழியாராச்சிப் பகுதி' ஒன்றைத் துவக்கினார்கள். இந்தப் பகுதியின் நோக்கம், திராவிட மொழிகளான தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் — என்னும் மொழிகளிடையே உள்ள தொடர்பை ஆராய்வதும், வடமொழி, மற்ற உலக மொழிகளின் நடுவே தமிழின் நிலையை வரையறுப்பதும், மொழித் துறையில் தமிழை வளப்படுத்துவதுமாகும். இப் பகுதிக்குக் கல்கத்தா பல்கலைக் கழகத்தைச் சார்ந்த மொழியியல் பேராசிரியரான சுனீதி குமார சாட்டர்ஜி என்பவரைத் தலைவராகவும், இன்னும் பல அறிஞர்களை உறுப்பினர்களாகவும் அமைத்தார்கள். குறிப்பாக, தமிழ்மொழியை ஆராய்வதற்குத் தமிழ் நாட்டில் மொழித் துறையில் சிறந்து விளங்கும் திரு. நா. தேவநேயப் பாவாணர் அவர்களை அந்தப் பகுதிக்குச் செயலாளராக ஆக்கினார்கள். அந்தக் காரியம் அவ்வளவு சுலபமாக முடியவில்லை; தமிழ் மக்கள் யாவரும் ஒருமுகமாக இட்ட கூப்பாடு காரணமாகவே அவர் அந்த வேலையில் அமர்த்தப்பட்டார். ஆனால், அவருடைய பதவிக்குத் தற்சமயம் ஆபத்து வந்திருக்கிறது.

திரு. சுனீதி குமார சாட்டர்ஜி எவ்வளவுதான் பன்மொழிப் பயிற்சி உடையவராக இருந்தாலும் அவர் வட இந்தியர் என்பதை நாம் மறக்க முடியாது. அவர் சமஸ்கிருதத்தில் அளவு கடந்த பற்றுடையவர்; இந்திய மொழிகள் யாவும் எப்படியாவது ஒரு வகையில் சமஸ்கிருதத்திலிருந்து தோன்றியவை என்ற கருத்துடையவர்; இவை யாவற்றையும்விட மத்திய அரசாங்கம் அமைத்த சமஸ்கிருதப் புத்துயிர்க் குழுவின் தலைவராக இருந்தவர் அவர். இத்தகையவரைக் கொண்டு வந்து தமிழ் ஆராய்ச்சிப் பகுதிக்குத் தலைவராக அமர்த்தியதே தவறு. இன்னும் இவருக்குத் தனியதிகாரமும் கொடுத்தது இப்போது தமிழுக்கே ஆபத்தாக வந்து முடிந்திருக்கிறது. இவரது மொழியாராய்ச்சி முடிவுகள் வடமொழியைத் தமிழுக்குச் செவிலித் தாயாக ஆக்கி, தமிழின் உயிரைக் குடிப்பதாயிருக்கின்றன. தற்போது இவர் சொல்லுவதுதான் அங்கே சட்டமாக இருக்கிறது. சிறிது தமிழும் மற்ற திராவிட மொழிகளும் கற்றிருந்தாலும், இவருடைய சிந்தனை, சொல், செயல் யாவும் சமஸ்கிருதத்தை நாடியே செல்கின்றன!

திரு. பாவாணர் அவர்கள் நேர்மையாகவும் உண்மையின் அடிப்படையிலும் செய்யும் ஆராய்ச்சிகளை இவர் புறக்கணித்து வருவதாகத் தெரிகிறது. மேலும், இவர் பாவாணரை ஒரு தீவிரவாதி என்று கூறி அவரை வேறு துறைக்கு மாற்றியிருக்கிறார். மேலும், இந்த வட நாட்டாருக்கு ஆதரவாகச் சில போலித் தமிழர்களும் இருக்கிறார்களாம்.

பாவாணருடைய ஆராய்ச்சிகள் பல தமிழ் நாட்டின் கண்களைத் திறந்திருக்கின்றன. மேலும் இவர் இந்தத் துறையில் உழைப்பது தமிழகத்துக்கும், அண்ணாமலைக் கல்வி நிலையத்துக்கும் ஏற்றம் தருவதாகும். இத்தகைய ஒரு அறிஞரைப் புறக்கணிப்பதுமல்லாமல், அவருடைய ஆராய்ச்சிகளை எள்ளி நகையாடுவதும், அவரைப் பதவியிலிருந்தே விரட்டப் பார்ப்பதும் அப்பட்டமான துரோகச் செயலாகும்! அவர் தன் ஆராய்ச்சியில் தவறு செய்தார் என்றால், அவருடைய கருத்துக்களை நாலுருவாகக் கொண்டு வந்து அதனை ஒரு பொது அறிஞர் குழுவின் முன் வைத்து அவர்கள் தீர்ப்புப்படி மாற்றுவதோ நீக்குவதோ செய்ய வேண்டுமே தவிர—ஒரு வட இந்தியரின் பேச்சையும், சில மொழிப் பற்றற்ற தமிழர்களின் பேச்சையும் கேட்டு இம்மாதிரி காரியத்தில் இறங்குவது ஒரு கல்வி நிலையத்துக்கு அழகல்ல!

இப்படிக்கு,

ஆ. மேகநாதன்

கணக்கு...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

லக மேதைகள்—இப்படி பல்லோரிடமிருந்தும் எதிர்ப்பு! அங்கிங்கெனாதபடி திசை யெட்டும் கண்டனக் கணைகள்!

புகைவண்டி நிலையங்களிலே இந்தி—

அஞ்சல் அட்டையிலே இந்தி—

பாமர மக்கள் முதல் படித்துணர்ந்தோர்வரை அனைவரும் அன்றாடம் கையாளுகின்ற நாணயப் போக்கு வரத்திலே இந்தி—

இப்படி ஆட்சியினர் கோணல் வழிகளில் தங்கள் வெறித்தனத்தை நிலைநாட்ட முற்படுகின்றனராயினும் அந்த எதிர்ப்பு நாளுக்கு நாள் பெருகிய வண்ணம் இருக்கிறது!

"தென்னாட்டில் ஐம்பது லட்சம் மக்கள் இந்தியைக் கற்றிருக்கின்றனர்..."

ஐம்பது லட்சம் மக்கள்—தென்னகத்திலே பெரும்பான்மையினராம்!

இந்தச் செய்தியைப் படித்த நமது கண்களும் புள்ளி விபரத்தைத் தேடுகின்றன.

ஆந்திரப் பகுதியின் மக்கள் எண்ணிக்கை 3,12,60,133.

தமிழகத்தில் ஜனதொகை 2,99,74,936.

கருநாடகத்தில் வாழ்கின்ற மக்கள் 1,94,01,193 பேர்.

கேரளத்திலே 1,35,49,118 மக்கள் இருக்கின்றனர்!

இந்தப் பத்து கோடி மக்கள் எண்ணிக்கையில் அமைச்சரின் கணக்குப்படி இந்தி கற்றவர்கள் ஐம்பது லட்சம் பேரேதான்!

இது பெரும்பான்மையான எண்ணிக்கையாம்; மிகவும் பெருமிதத்தோடு சொல்லிப் பூரித்துப் போயிருக்கிறார் அமைச்சர் தத்தார்!

இது அறியாமையின் விளைவா? அல்லது நாட்டு மக்களை ஏய்த்துவிடலாம் என்ற தப்புக் கணக்கோடு வெளியிடப்பட்ட பொய்யா?



ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி. 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு